SOND

SOND Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- SOND

# மாதாந்த அறிக்கை பங்குனி, 2015

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

435/09 A,
temple road
Nallur, Jaffna

இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை
4. மன்னார்

ஆகிய நான்கு மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## இயற்கை விவசாய பண்ணை

பருத்தித்துறை பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்ட பயிர்கள் பராமிக்கப்படுவதோடு இம்மாதத்தில் பலா, சித்திரைவேம்பு, மலைவேம்பு என்பன புதிதாக நாட்டப்பட்டுள்ளதுடன் 1000 தேசிவிதைகள் நாற்று மேடையில் பதியம் போடப்பட்டுள்ளது.

சேதன விவசாய மூலம் பண்ணையில் அறுவடை செய்யப்பட்ட நெல் 20 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதோடு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் தக்காளி, வெண்டி என்பனவும் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் விவசாயிகள் நிலப்பரப்பில் வைக்கப்பட்ட வெண்டிக்காய், கீரை, கறிமிளகாய், தக்காளி, என்பனஅறுவடைசெய்யப்பட்டுஅவர்களிடம் வழங்கப்பட்டுள்ளதுடன் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு அடுத்த போகத்திற்கு பயன்படுத்துவதற்காக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.








.

01.03.2015 அன்று பருத்தித்துறையிலுள்ள பல்லப்பை இயற்கை விவசாயப் பண்ணையில் திரு.யோகநாதன் அவர்களின் தலைமையில் விதைகளை பதப்படுத்துதலும் நாற்றுக்களை

உருவாக்குதலுக்குமான களப்பயிற்சி விவசாயப் பண்ணை பணியாளர்களுக்கு நடைபெற்றது.

SOND

## மிதிவெடி அபாயக் கல்வி செயற்திட்டம்

MRE பணியாளர்களினால் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 5வகையிலான 90 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 07 வெடிக்காத வெடிநிலையில் உள்ளவெடிபொருட்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 10 தடவை 55 வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு 162 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. அத்துடன் 03தடவைகள் மிதிவெடி அபாயப் பகுதிக்கு சென்று பார்வையிட்ததற்கு அமைவாக அங்குள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் 30 நபர்களினைதொடர்புகொண்டு MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மற்றும் 46 தடவைகள் சமூகமட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக 1419 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. மேலும் ஒருதடவை குழுக்கலந்துரையாடல் மூலம் 36 நபர்களுக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டதுடன் ஒரு தடைவ தகவல் சேகரிக்கும் செயற்பாட்டினூடாக 12 பேர்களுக்கு MRE விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 1659 பேருக்கு இம்முறை எமது MRE பணியாளர்களினால் MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.










மேலும் MRE செயற்பாட்டுப் பிரதேசங்களில் MRE விழிப்புணர்வூட்டும் பதாதைகள் பொருத்தப்பட்டதுடன் MRE விழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அத்தோடு 305 MRE விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

SOND

## MRE செயற்திட்டத்தின்

தெல்லிப்பளைபிரதேசங்களில் ஒரு பகுதியான வளலாய் மற்றும் வசவவிளான் பகுதிகள் புதிதாக மக்களின் சொந்த குடியேற்றங்களுக்காக மீள் குடியமர்வாகவிடப்பட்டுள்ளனர் இப்பிரதேசங்களில் தங்களின் குடியேற்றங்களை அமைத்துக்கொள்ளும் மக்களை சந்தித்து எமது MRE பணியாளர்களினால் MRE விழிப்புணர்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.







இம்மாதம் Unicef இலிருந்து ஒருகுழுவினர் வளலாய் பகுதியில் தற்போதுவிடுபட்டுள்ள பிரதேசங்களினுடைய நிலவரம் பற்றி பார்வையிடுவதற்காக குறிப்பிட்டபிரதேசத்திற்கு வருகைதந்திருந்ததுடன் அப்பிரதேசத்தில் தங்கள் காணிகளை பார்வையிடுவதற்காக வந்திருந்தவர்களுடனும் உரையாடிச் சென்றிருந்தனர்.





MRE செயற்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை பிரதேசத்தில் உள்ள சிறுவர் கழகங்களான வசவவிளான் சிறுவர் கழகம் மற்றும் துர்காபுரம் சிறுவர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் யாவும் தெல்லிப்பளை பிரதேசசெயலகத்தின் CRP இடம் கையளித்து பின்னர் அவர்களுக் கூடாக எமது MRE பணியாளர்களினால் வழங்கப்பட்டுள்ளது.







## MRE செயற்திட்டத்தின்

2015.03.05 அன்று கைதடி நுணாவில் தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள பயிற்சி மண்டபத்தில் MRE செயற்திட்ட பணியாளர்கள் மற்றும் SOND அலுவலகப் பணியாளர்களுக்கான மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சியானது பயிற்றுவிப்பாளரான எஸ்.கிரிதாஸ் அவர்களினால் நடத்தப்பட்டது. இதில் தொழில் பயிற்சிநிலையத்தின் பயிற்சியாளர்கள் உட்பட 13 பேர் கலந்து கொண்டிருந்தனர்.










MRE திட்டத்தில் மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிவழங்கும் முகமாக ஜெயபூர் நிறுவனத்தினூடாக3 பேருக்கானதோள் மூட்டு ஊன்றுகோலும் ஒருமுழங்கை ஊன்றுகோலும் அன்பளிப்பாக எமது SOND அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது.

SOND

## தகவல் வளநிலையத்தின் செயற்பாடுகள்

இம்மாதம் எமது வளநிலையத்தின் புத்தகபாவனையாக நடமாடும் நூலகம் செய்யப்படும் பாடசாலைகளான யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்கலவன் பாடசாலை.) (யா/நல்லூர் இந்து தமிழ் மகளிர் கல்லூரி.)(யா/இளையதம்பி வித்தியாலயம்) ஆகிய பாடசாலைகளுக்கு 6 தலைப்பில் நூல்கள் வழங்கப்பட்டுள்ளது.

## விசேட செயற்பாடுகள்

முல்லைத்தீவு பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி தற்போது ஓய்வுபெற்ற அ.சிவஞானசுந்தரம் என்பவரிடமிருந்து காந்திஜி முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் இயங்கிவரும் காந்திஜி முன்பள்ளி பாடசாலையின் ஆசிரியருக்கான பயிற்சிவகுப்பு ஒன்று யா/ இந்துமகளிர் பாடசாலைஅதிபரின் அனுமதியுடன் எமது பணியாளரினால் ஒழுங்கமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். (Create a Conducive Society for Good Environment for the Future).**

மட்டக்களப்பு சொண்ட் நிறுவனமானது. டயக்கோணியா நிதித்திட்டத்தில் பலசெயற்பாடுகளை பட்டிப்பளை, ஆரையம்பதி, மட்டக்களப்பு பிரதேச செயலகங்களில் விவசாய அமைப்பக்கள், மகளீர் அமைப்புக்கள், சிறுவர்கள், பெரியோர்கள், ஏனைய அறிவுசார் பிரமுகர்களுடனும் இணைந்து பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

## காலநிலை மாற்றம் பற்றியகுழுக் கலந்துரையாடல்

காலநிலைமாற்றம் பற்றியகுழுக் கலந்துரையாடல் 17.03.2015ம் திகதி அலுவலகத்தில் SOND நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அவர்களது சேவைகள், செயற்பாடுகள் அவை தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

பாசிக்குடா கடற்கரையில் முருகைக் கல் அகழ்ந்துஅகற்றப்படல்,பொதுமக்கள் சிலகடற்கரைப் பகுதிகளில் நடமாடமட்டுப்பாடுகள் விதித்தல் போன்ற பிரச்சினைகள் பற்றியும், சந்தனமடு ஆற்றுப் பகுதியில் மட்டு மீறிமணல் அகழ்தல் போன்றன பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது மேற்படிவிடயம் தொடர்பாக செயற்பட ஆர்வமுள்ளவர்கள் குழுவாக இணைந்து கொண்டு அடுத்தகட்டமாக சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டுஅரசாங்கஅதிபரிடம் இவற்றை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைஎடுக்கும்படிகோரலாமென தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

## Capacity building of Farmers and women societies And Exposure visits

செல்வாநகர் கிழக்குமாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் 07.03.2015 அன்றுகலந்துரையாடல் நடாத்தியதுடன் செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டல் திட்டஉத்தியோகத்தர் கிறைசன் அவர்களால் கூறப்பட்டதுடன் பழமரக்கன்று வழங்குவதற்கான பயனாளிகள் தெரிவும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 28.03.2015ம் திகதி 50 பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு அடுத்தமாதம் விவசாய போதனாசிரியரின் உதவியுடன் வீட்டுத்தோட்டம் அமைத்தல், பழமரக்கன்றுநடுதல் தொடர்பானஅறிவூட்டல் நிகழ்வினை செய்யஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் ஆரையம்பதி 02 மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கத்தில் உள்ள 50 பயனாளிகளுக்கும் சேவுகப்பற்று கமநலஅமைப்பு அங்கத்தவர்கள் 50 பேருக்கும் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது






SOND

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். (Create a Conducive Society for Good Environment for the Future).**

**பாடசாலை மட்டத்திலான காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள், மரக்கன்றுகள் வழங்குதல்**

கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம். கல்லடி உப்போடை RKM விவேகானந்தா மகளீர் மகா வித்தியாலயம், திராய்மடு, நாவலடி நாமகள் வித்தியாலயம், ஊறணி சரஸ்வதி வித்தியாலயம், புளியடிமுனை தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய 05 பாடசாலைகளிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகத்தரின் பரிந்துரைக்கமைய சந்திப்புக்கள் இடம்பெற்று இங்கு செய்யப்படவுள்ள செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடப்பட்டது.

இதன் பிரகாரம் 04 பாடசாலைகளில் முதற்கட்டமாக புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள் கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயத்தில் 24.03.2015ம் திகதியும், திராய்மடு, நாவலடி நாமகள் வித்தியாலயத்தில் 20.03.2015 ம் திகதியும், ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தில் 23.03.2015ம் திகதியும், புளியடிமுனை தமிழ்க் கலவன் பாடசாலையில் 30.03.2015ம் திகதியும் நடாத்தப்பட்டது. அத்துடன் கல்லடி உப்போடை RKM விவேகானந்தா மகளீர் மகா வித்தியாலயத்தில் பாடசாலை விடுமுறை விட்டு மீள ஆரம்பித்தவுடன் இந் நிகழ்வினை நடத்தலாமென என இதற்குப் பொறுப்பான ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டது. அது போல் பாடசாலையினை பசுமையாக்கும் முதற்கட்ட செயற்பாடாக 05 பாடசாலைகளுக்கும் 05 பப்பாசி மரக்கன்றுகள் வீதம் மொத்தமாக 25 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.








SOND

## "அபிவிருத்தியில் அரசுசாராபங்குதாரர்கள்" (NSA) திட்டம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் கிராமமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை கிராமமட்டத்திலே தீர்மானிக்கும் வகையில் கிராமமட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதுடன் சனசமூகநிலையங்களை அமைத்துபலப்படுத்தி அவர்களுடைய இயவளவை மேம்படுத்தி இதனூடாக நிலை பேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதலை நோக்காகக் கொண்டு இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது இத் செங்கலடிப் பிரதேசசெயலாளர் பிரிவில் 10 கிராமங்களில் கிராமமட்ட அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## செயற்திட்டம் தொடர்பாக விளக்கமளித்தல்

செயற்திட்டம் தொடர்பாக செங்கலடிப் பிரதேசசெயலாளர் மற்றும் தொடர்புடைய அரசஉத்தியோத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கஉறுப்பினர்கள் போன்றோர் இத் திட்டத்தின் நோக்கம்,அதன் பங்குதாரர்கள்,பயனாளிகள்,செயற்பாடுகள் போன்றபல்வேறான விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. மேலும் இத் திட்டம் தொடர்பாக கிராமமக்களும் அறிந்துகொள்ளும் நோக்கில் மேற்படி விடயங்கள் தொடர்பாக தளவாய், கொடுவாமடு மற்றும் ஈரளக்குளம் ஆகிய கிராமங்களிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு

டயக்கோனியா நிறுவனத்தின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு செயலாளர் பிரிவில் **SOND** நிறுவனத்தின் அமுல்படுத்தலில் கண்ணகி மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்டபழமரக் கன்றுகளானது கண்ணகிபுரம் கண்ணகி மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர் சங்கம்,தீவுக்காலை பிரதேசத்தில் செயற்பட்டுவரும் தீவுக்காலை கிராமமறுமலர்ச்சிமன்றம் ஆகிய 419 சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு பப்பாசி ,எலுமிச்சை, பலா, தூதுவிளா ஆகிய மரக்கன்றுகள் அக்கரைப்பற்று விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் போதனாசிரியர் திருக.கெநாதன் அவர்களின் ஆலோசனையுடன் **SOND** அமைப்பினரால் 2013.03.28 ம் திகதி வழங்கிவைக்கப்பட்டது.








## விவசாயப்பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் **SOND** அமைப்பினால் 11 ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இப் பண்ணையில் தென்னை, வாழை மரக்கறி பழ மரக்கன்றுகள், தானியங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.

SOND

## கணக்காய்வு

**SOND அலுவலகத்திற்கான 2014 ம் வருடத்திற்கான கணக்காய்வானது 2015.03.16 ம் திகதி அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் இடம் பெற்று இதற்கான களவிஜயமும் கணக்காய்வாரள்களால் மேற் கொள்ளப்பட்டது**

## தகவல் வளநிலையம்

**சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 6 தலைப்பில் 94 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

# மன்னார் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**அபிவிருத்தியிலே அரச சாராப் பங்காளார்களின் செயற்பாடுகள் செயற்றிட்டம் தொடர்பாக அரச தரப்பினருக்கான செயல்விளக்கக் கூட்டம்.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் கிராமமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை கிராமமட்டத்திலே தீர்மானிக்கும் வகையில் கிராமமட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதுடன் சனசமூகநிலையங்களை அமைத்துபலப்படுத்தி அவர்களுடைய இயவளவை மேம்படுத்தி இதனூடாக நிலை பேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதலை நோக்காகக் கொண்டு இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு, முசலி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்ப்படுத்தப்படவிருக்கும் செயற்றிட்டம் தொடர்பாக அரச தரப்பினருக்குத் தெளிவுபடுத்தும் செயல்விளக்கக் கூட்டமானது 10,11/03/2015 ஆகிய தினங்களில் மேற்படி பிரதேச செயலகங்களின் கேட்போர் கூடங்களிலே காலை 10.30 மணிதொடக்கம் பி.ப 1.00 மணிவரை நடைபெற்றது.

மேற்படி திட்டம் தொடர்பான செயல்விளக்கக் கூட்டத்திற்கு மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் முசலி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரும் தலைமை தாங்கியதுடன் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் நிறுவனங்களின் சார்பிலே திரு.ஜோர்ச் ZOA நிறுவனம் சார்பிலும் திரு.செந்துராசா SOND நிறுவனத்தின் சார்பிலும் திரு.M.R.பீரிஸ் YGRO நிறுவனத்தின் சார்பிலும் திட்டம் தொடர்பான அரச தரப்பினருக்குத் தெளிவுபடுத்தினர்.







மேற்படிக் கூட்டத்திற்கு இரண்டு பிரதேச சபைகளின் தவிசாளர்களும், செயலாளர்களும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், சமூகசேவைத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் மற்றும் விவசாயத் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், கால்நடை மிருக வைத்திய திணைக்களங்களின் உத்தியோகஸ்தர்களும் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு திட்டம் தொடர்பான தெளிவினைப் பெற்றுக்கொண்டனர்.

## அபிவிருத்தியிலேஅரசசாராப் பங்காளர்களின் செயற்பாடுகள் செயற்றிட்டம் தொடர்பாககிராமமக்களுக்கானசெயல்விளக்கக் கூட்டம்.

**மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சிலவக்கை, சன்னார், காயாநகர், தேவன்பிட்டி, கத்தாளம்பிட்டி, இலுப்பக்கடவை, அந்தோணியார்புரம், மினுக்கன், வேட்டையான்முறிப்பு, பாப்பாமோட்டை, மூன்றாம்பிட்டி, முள்ளிக்கண்டல் மற்றும் பெரியமடு ஆகிய கிராமங்களிலும் முசலி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொண்டச்சிக்குடா, கூலாங்குளம், மருதமடு, தம்பட்டைமுசலி, சவரியார்புரம், கொக்குப்புடையான் மற்றும் s.p.பொற்கேனி ஆகிய கிராமங்களிலும் ZOA,SOND மற்றும் YGRO நிறுவனங்களின் பிரதிநிதிகளினால் 16/03/2015 திகதி திட்டம் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டது.**













SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.